# வணிகக்கல்வி

## போக்குவரத்தும் வழங்கல் சேவையும்



e தக்சலாவ™ கல்விக்கூடம்
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சிமட்டம் - 10.3 :- வணிகங்களின் வெற்றிக்கு களஞ்சியப்படுத்தலை பயனுறு-
ியாகப் பங்களிப்புச் செய்யும் முறையினைத் தேடியறி-
வர்.

## களஞ்சியசாலையொன்றில் பொருட்களைக் கையாளவேண்டிய முறைகள்.

1. இராக்கை முறையிலான களஞ்சியப்படுத்தல். (Pallet Racking)
2. பொருட்களைக் குவியலாக வைத்தல் (Bulk Storage).
3. இடத்திற்கிடம் கொண்டு செல்லக்கூடிய தட்டுக்களுடனான சட்டகம் பயன்படுத்தல்.
4. பின்பக்கமாக நகர்த்தக்கூடிய இறாக்கைகள் (Push Back Racks).
5. இரு தட்டுக்களுக்கிடையில் காணப்படும் மேலதிக தட்டு (Mezzanine).
6. தன்னியக்க களஞ்சியப்படுத்தல் முறை (Automated Strorage system).

### 1. இராக்கை முறையிலான களஞ்சியப்படுத்தல்.

- குறைந்தவிலை கொண்ட பொருட்களை இலகுவாகவும் வசதியாகவும் கையாளும் முறையாகும்.
- பலதட்டுக்களை அமைத்து ஒவ்வொரு தட்டுக்களிலும் ஒவ்வொரு வகைப் பொருட்களை அடுக்கி வைத்திருக்கும் முறை இதுவாகும்.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு தட்டினையும் இலகுவாக அடையக்கூடிய தன்மை காணப்படும்.
- பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து பொருட்களை இடம் மாற்றுவதற்கு ஏணி அல்லது போக்ட் லிப்ட் டிரக் (Fork Lift Druck) பயன்படுத்தப்படும்.

### 2. பொருட்களைக் குவியலாக வைத்தல்.

- களஞ்சியசாலையின் ஓர் இடத்தில் ஒரே வகையான பொருட்களை ஒன்றன்மேல் ஒன்றாக தரையில் குவியலாக அடுக்கி வைக்கும் முறையாகும்.

  நுபு: அரிசி, சீனி, மா, செங்கல் போன்ற வகையான பொருட்கள்.

- இங்கு பொருட்களை வைப்பதற்கு இராக்கையோ அல்லது வேறு எந்தப் பொருளோ பயன்படுத்தப்படுவதில்லை.

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### 3. இடத்திற்கிடம் கொண்டு செல்லக்கூடிய தட்டுக்களுடனான சட்டகம் பயன்படுத்தல்.

- இம்முறையானது தட்டு முறைகள் பலவற்றை உள்ளடக்கி இடத்திற்கிடம் கொண்டு செல்லக்கூடிய நாடாக்களைக் கொண்டதாக இருக்கும்.
- இங்கு உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதும் மீளப்பெற்றுக் கொள்வதும் ஒருபக்கத்தில் மேற்க்கொள்ளக்கூடியவாறு அல்லது உற்பத்திப் பொருட்களின் களஞ்சியப்படுத்தல் ஒரு பக்கத்திலும் அவற்றை மீள எடுத்தல் எதிர்ப்பக்கத்திலும் இடம்பெறக்கூடியவாறும் இவற்றைப் பொருத்த முடியும்.
- இம்முறையில் பொருட்களைக் கையாளும்பொழுது பொருள் கையாளல் மிக உயரந்த மட்டத்தில் இருப்பதனால் இடவசதியினை மிகச் சிறப்பாக பயன்படுத்த முடியும்.
- குளிரூட்டப்பட்ட களஞ்சியசாலையில் கிரயம் மிகக் கூடிய பொருட்களைக் கையாள்வதற்கு இம்முறை மிகப் பொருத்தமானது.
- பொருட்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காக தட்டுக்களை இடத்திற்கிடம் கொண்டு செல்லும் வேகத்தை கட்டுப்படுத்துவதற்கான உபகரணங்களைப் பயன்படுத்த முடியும். .

### 4. பின்பக்கமாக நகர்த்தக்கூடிய இறாக்கைகள்.

- இங்கு தட்டுக்களுடன் கூடிய இறாக்கைகளுக்குச் சிறிய சில்லுகள் பொருத்தப்பட்டிருக்கும்.
- சில்லுகள் ஒன்றின் மேல் ஒன்று வரக்கூடியவாறு பல தட்டுக்கள் காணப்படும்.
- ஒரு சில்லின் மேல் உள்ள தட்டில் உற்பத்திப் பொருளை வைத்து அதனைப் பின் பக்கமாக நகர்த்திய பின்னர் அதற்கு முன்னால் உள்ள அடுத்த தட்டினைக் கொண்டுவர வேண்டும்.

### 5. இரு தட்டுக்களுக்கிடையில் காணப்படும் மேலதிக தட்டு.

- களஞ்சியசாலையிலுள்ள இரு தட்டுக்களுக்கிடையில் மேலதிக தட்டொன்றினை உருவாக்கிப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் முறையாகும்.
- இம்முறையைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்படும் கட்டடங்களில் காணப்படும் இட வசதிகள் இரு மடங்காகும்.

### 6. தன்னியக்க களஞ்சியப்படுத்தல் முறை.

- களஞ்சியசாலையில் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றை மீளப் பெற்றுக் கொள்ளல் என்பவற்றை கணினித் தொழில்நுட்பத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படும் இயந்திரமொன்றின் கைமுறையிலான கருவி மூலம் மேற்கொள்ளல் ஆகும்.
- களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் மிகச் சிறிய உருப்படிகளை மிக இலகுவாக மீளப்பெற்றுக் கொள்வதற்கு இம்முறை பயன்படுத்தப்படும்.

  EG: ஆயிரக்கணக்கான புத்தகங்கள், எழுதுகருவிகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள களஞ்சியசாலைகளிலும் பதிவு கூடங்களில் (Record ROOM) உரிய உடுப்படியொன்றினை வைப்பதற்கும் மீள எடுப்பதற்கும் இம்முறை பொருத்தமானது.

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# களஞ்சியசாலையில் பொருட்களை இடத்திற்கிடம் மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள்.

1. போக்ப் லிப்ட் (Fork Lift).
2. பெலிட் ஜக்ஸ் (Pallet Jacks).
3. பண்டங்களை இடமாற்றும் நாடா (Conveyor Belt).
4. போக்ப் லிப்ட் டிரக் (Fork Lift Truck).

## களஞ்சியசாலையில் பொருட்களைக் கையாள்வதற்கும் பொருட்களை இடம் மாற்றுவதற்கும் உபகரணங்களைப் பயன்படுத்துவதனால் பெற்றுக்கொள்ளப்படும் அனுகூலங்கள்.

1. களஞ்சியசாலை மிகச் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் - இதனால் களஞ்சியசாலை உரிமையாளருக்கும் ஊழியர்களுக்கும் களஞ்சியசாலையினைப் பராமரிப்பதும் முகமைத்துவம் செய்வதும் இலகுவாக அமையும்.
2. பொதியிடப்பட்ட உற்பத்திகளும் ஊழியர்களும் பாதுகாக்கப்படல் - அதாவது ஊழியர்கள் வேலை செய்யும் பொழுது அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான அச்சுறுத்தல் ஏற்படாதென்பதுடன் முறையாக பொருட்களைக் கையாள்வதன் காரணமாக உற்பத்திப் பொருட்கள் அவற்றிற்குரிய இடங்களில் வைக்கப்படுவதனால் பாதுகாப்பான நிலையில் இருக்கும்.
3. ஏற்கவேண்டிய சிரமங்களும் நேரமும் சேமிக்கப்படும் - அதாவது முறையான முறைமையொன்றைப் பின்பற்றிக் களஞ்சியசாலையில் பொருட்கள் வைக்கப்பட்டிருப்பின் அது பொருட்களைக் கையாள்வதற்கும் மீள எடுப்பதற்கும் ஏற்படும் சிரமத்தையும் நேரத்தையும் சேமிக்கலாம்.
4. களஞ்சியசாலைின் இடவசதிகள் மீதமாக இருத்தல் - முறையாக பொருட்களை அடுக்கி வைத்திருத்தல் காரணமாக களஞ்சியசாலையின் இடவசதிகள் மீதப்படுத்தப்படும்.

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## ஒப்படை

பிரதேசத்தில் காணப்படும் களஞ்சியசாலையொன்றை மேற்பார்வை செய்து பின்வரும் விடயங்களை உள்ளடக்கி அறிக்கை ஒன்று தயாரிக்க.

- நீங்கள் மேற்பார்வை செய்த களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் பொருள் வகைகள்.
- அவ்வொவ்வொரு பொருள் வகைகளும் பொதியிடப்பட்டிருந்த முறை
- பொருட்களைக் கையாள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொருட்களும்.
- கையாளும் பொழுது கவனத்தில் கொள்ளப்பட்ட விசேட விடயங்கள்
- பொருட்கள் இடமாற்றம் செய்யப்படுகின்ற முறை.
- பொருட்களை அங்கும் இங்கும் இடமாற்றுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள்.

## *பயிற்சி*

## *பகுதி - I*

1. இருப்புக்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு அல்லது நீண்டகாலம் வைத்திருப்பதற்காகப் பயன்படுத்தப்படும் இடம் ..... எனப்படும்.

2. தொழிற்சாலைக்கு மூலப்பொருட்களைக் கொண்டுவருவதற்கான கிரயம் முடிவுப்பொருட்களை இறுதி நுகர்வோருக்கு விநியோகிக்கும் வரையில் ஏற்படும் கிரயம் ..... எனப்படும்.

3. குறைந்த விலை கொண்ட பொருட்களை இலகுவாகவும் வசதியாகவும் கையாளும் முறை ..... முறையிலான களஞ்சியப்படுத்தல் எனப்படும்.

4. குளிரூட்டப்பட்ட களஞ்சியசாலையில் கிரயம் மிகக் கூடிய பொருட்களைக் கையாள்வதற்கு ..... களஞ்சியசாலை முறை பொருத்தமானதாக அமையும்.

5. மிகச் சிறிய உருப்படிகளை மிக இலகுவாக மீளப் பெற்றுக் கொள்வதற்கு ..... ..... முறை மிகப் பொருத்தமானது.

Copyright

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk